**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 330** **நாள் : 23.10.2025**

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், மேட்டுப்பாளையம், அருந்ததியர் நகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இன்று (23.10.2025) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-71, மேட்டுப்பாளையம், அருந்ததியர் நகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அப்பகுதியில் வசித்து வரும் மக்களின் குறைகள் குறித்து கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர், அப்பகுதியில் உள்ள விளையாட்டு மைதானத்தினைப் பார்வையிட்டு, அதனை மேம்படுத்துவது குறித்து அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார். மழைக்காலங்களில் திடக்கழிவுகள் சேகரித்தல் மற்றும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளுதல் ஆகியவற்றை உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி, ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**

**பெருநகர சென்னை மாநகராட்சி**